பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 10 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**2.** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளையோர் பங்களிக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

**3.** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முடிவடைந்த மாநிலங்களில் பெயர் சேர்ப்பதற்கான சிறப்பு முகாம்களை நடத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

**4.** பசுமை எரிசக்தி வழித்தடத்திற்கான மூன்றாம் கட்டத்திட்டத்திற்கு மத்திய அமைச்சவை ஒப்புதல் அளித்துள்ளது பெரிய அளவில் பலன்களை தரும் என்று ஐ நா கூறியுள்ளது.

**5.** **Fayetteville** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

ஆந்திராவில் அமைய உள்ள சர்வதேச தோட்டக்கலை முனையம் அத்துறையை வலுப்படுத்துவதோடு, விவசாயிகளுக்கும் எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இன்று மதனப்பள்ளியில் இம்முனையத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களையும் பட்டியலிட்டார்.

ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் தக்காளி, மாதுளை, வாழை, மாம்பழ சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் இந்த முனையம் அமைய உள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளையோர் பங்களிக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசப்பிதா மகாத்மாகாந்தி மற்றும் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்த தின நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

இவ்விரு தலைவர்கள் பின்பற்றிய உண்மை, அகிம்சை, எளிமை, நேர்மை உள்ளிட்டவற்றை இளையோர் தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் வளர்ச்சிக்காக இவ்விரு தலைவர்கள் ஆற்றிய பங்களிப்பு, எதிர்கால சந்ததியினருக்கு உந்து சக்தியாக திகழும் என்றும் திரு ஓம். பிர்லா கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டில் அவசர நிலையை பிரகடனம் செய்து ஜனநாயகத்திற்கு எதிராக செயல்பட்டது காங்கிரஸ் கட்சி என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் 50 முறை கலைக்கப்பட்டதும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் என்று கூறினார்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க ஜனநாயகத்தை பாதுகாப்பது குறித்து காங்கிரஸ் தற்போது பேசுவது வேடிக்கையாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

தேசப்பிதா மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கம் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாகவம், அவர் தெரிவித்தார்.

கோவா அரசும் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருவதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முடிவடைந்த மாநிலங்களில் பெயர் சேர்ப்பதற்கான சிறப்பு முகாம்களை நடத்துமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக, முதல் முறை வாக்காளர்கள் மற்றும் விடுபட்ட வாக்காளர்களை பட்டியலில் சேர்க்கும் வகையில், இந்த முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு, தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு முன்னதாக உள்ள வாக்காளர் பட்டியலையும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலையும் சரிபார்த்து விடுபட்ட வாக்காளர்களை சேர்க்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, விழிப்புணர்வு முகாம்களை நடத்துமாறும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>>

பசுமை எரிசக்தி வழித்தடத்திற்கான மூன்றாம் கட்டத்திட்டத்திற்கு மத்திய அமைச்சவை ஒப்புதல் அளித்துள்ளது பெரிய அளவில் பலன்களை தரும் என்று ஐ நா கூறியுள்ளது.

இதுதொடர்பாக, ஐ நா சுற்றுச்சூழல் தலைவர் திரு **Simon Stiell** வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேற்று முன்தினம் இந்த திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விநியோக கட்டமைப்பும் இதன்மூலம் வலுப்பெறும் என்று அவர் தெரிவித்தார்.

இது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்க்கும் என்றும் அவர் கூறினார்.

சூரியசக்தி பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் திகழ்வதற்கும் இந்த திட்டம் வகை செய்யும் என்று திரு **Simon Stiell** தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுப்பொருட்களின் **8**-ஆம் கட்ட ஏலம் இம்மாதம் இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இந்த ஏலத்தில் **30** பரிசுப்பொருட்கள் இடம்பெற்றுள்ளதாக கலாச்சாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தில்லி மெட்ரோ குறித்து விவரிக்கும் இரண்டு பரிசுகளும் இதில் அடங்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இதன் காரணமாக மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது மன் கி பாத் நிகழ்ச்சி குறித்த தகவல்...

***(Sound Byte — (Voice) 67 Sec. )***

*பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகி வருகிறது.*

*நாட்டு மக்களுக்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்கும் வகையிலும், திட்டங்கள் குறித்த விளக்கமும், தூய்மையை பராமரிப்பது, நீர் மேலாண்மை, சுயசார்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் இந்நிகழ்ச்சி வாயிலாக பிரதமர் உரையாற்றி வருகிறார்.*

*திரு நரேந்திர மோடிக்கு முன்னதாக, எந்தவொரு பிரதமரும் இதுபோன்ற நிகழ்ச்சியில் பங்கேற்றதில்லை.*

*கடந்த 2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது 100-வது மன் கி பாத் உரையில், மக்கள் இயக்கமாக இந்த நிகழ்ச்சி உவெடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.*

*மன் கி பாத் நிகழ்ச்சியின் மூலமாக பிரதமர் பல்வேறு பயனுள்ள கருத்துகளை பகிர்ந்துகொண்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சி குறித்து கருத்து தெரிவித்துள்ள இந்தி நடிகர் அமீர்கான், மன் பி பாத் நிகழ்ச்சி மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்.*

*கோடிக்கணக்கான மக்கள் பிரதமரின் மன் கி பாத் உரையை கேட்பதாகவும், அதன்மூலம் அரசு நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நாடு முழுவதும் அறியப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

<<<<<>>>>>>

காந்தி ஜெயந்தியையொட்டி, தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ், தமிழகத்தின் காஞ்சிபுரத்தில் உள்ள ரங்கசாமி குளத்தை தூய்மைப்படுத்தும் பணியில் 300-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்றனர்.

தொடர்ந்து இதுபோன்று பல்வேறு குளங்களை சீரமைக்க உள்ளதாக இப்பணியில் ஈடுபட்ட தன்னார்வலர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — தன்னார்வலர் — 30 Sec.)*

நாட்டை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில், இப்பணிகளை மேற்கொண்டதாக இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

*(Sound Byte — மாணவிகள் — 30 Sec. )*

<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் எட்டரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை ஈர்க்கும் வகையில், 67 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

மும்பையில் மகாராஷ்ட்ரா முதலீட்டாளர்கள் மாநாட்டில், அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதன்மூலம், 2 லட்சத்து 90 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று மகாராஷ்ட்ரா அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முதலீட்டிற்கான முன்னணி மாநிலமாக மகாராஷ்ட்ராவை உருவாக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியுடன் உள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

பஞ்சாபையொட்டிய எல்லைப்பகுதியில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தானை சேர்ந்த இருவர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

Tarn Taran பகுதியில் இவர்கள் ஊடுருவ முயன்றதாகவும், அதை தடுக்க விடுத்த எச்சரிக்கைகளையும் புறக்கணித்துவிட்டு அவர்கள் தொடர்ந்து ஊடுருவ முயன்றதன் காரணமாக சுட்டுக்கொல்லப்பட்டதாக எல்லை பாதுகாப்புப் படையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

Fayetteville சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Aryan Shah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 2-6, 6-3 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Evan Bynoe-ஐ வென்றார்.

----------------

பல்கேரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Muskaan Khan காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-16, 21-12** என்ற செட் கணக்கில், செர்பியாவின் **Sara Loncar** -ஐ வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Siddhartha Dass**-ம் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**--------------**

**Dutch** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tara sha** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>**